செ.வெ.எண்: 690 நாள்: 23.10.2020

**தஞ்சாவூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் நடுவூர் கால்நடைப் பண்ணையில் 17 கால்நடைகள் 05.11.2020 அன்று பொது ஏலம் விடப்படவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப தகவல்.**

**ஏல நிபந்தனைகள்**

1. ஏலம் அரசு விதிமுறைகளின்படி பகிரங்கமாக நடத்தப்படும்.

2. ஏலத்தில் கலந்து கொள்ளும் நபர்கள் தனித்தனியாக ஏலம் முன் வைப்புத்தொகை **ரூ.20,000/-க்கு "Deputy Director of Animal Husbandry, District Livestock Farm, Naduvur"** என்ற பெயரில் இப்பண்ணை வங்கி கணக்கு வைத்திருக்கும் **State Bank of India,Orathanadu -** இல் மாற்ற தக்கவகையில் **(Payable at Orathanadu)** பெறப்படும் வங்கி வரைவோலை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

3. ஒரு நபரிடமிருந்து ஒரு வங்கி வரைவோலை மட்டுமே பெறப்படும். வரைவோலை பெறப்பட்டவுடன் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு ஏலத்தில் கலந்து கொள்வதற்கான அனுமதி டோக்கன் வழங்கப்படும். வங்கி வரைவோலைகள் துணை இயக்குநர் அலுவலகத்தில் 04.11.2020 அன்று காலை 10.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை பெறப்படும். மாலை 4.00 மணிக்கு மேல் கூட்ட நெரிசல் ஏற்படாமல் தவிர்க்கும் பொருட்டு, அலுவலகத்தில் முன்வாயில் மூடப்பட்டு 4.00 மணிக்கு முன்னர் அலுவலகத்திற்குள் இருப்பவர்களுக்கு மட்டும் நிலுவை இன்றி பதிவு மேற்கொள்ளப்பட்டு வரைவோலைகள் பெற்றுக்கொண்டு அனுமதி சீட்டு வழங்கப்படும். மாலை 4.00 மணிக்கு பின்னர் வங்கி வரைவோலை வாங்கப்பட மாட்டாது என கண்டிப்புடன் தெரிவிக்கப்படுகிறது.

4. பொது ஏலத்தில் கலந்து கொள்பவர்களின் பெயர் மற்றும் முகவரி காவல் துறையினருக்கு அனுப்பி வைக்கப்படும்.

5. வைப்புத் தொகையாக செலுத்தப்படும் வங்கி வரைவோலைகள் அனைத்தும் 29.10.2020 அன்றோ அல்லது அதற்கு பின்னர் 04.11.2020 அன்று வரை பெறப்பட்ட வங்கி வரைவோலையாக இருக்க வேண்டும்.அதற்கு முந்திய தேதியில் வரைவோலைகள் ஏற்க இயலாது. ஏலத்தில் வங்கி வரைவோலைகளை கொடுத்த நபர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். காவல்துறை உதவியுடன் ஏலம் நடத்தப்படும்.

6. ஏலம் முன்வைப்புத் தொகை செலுத்துபவர்கள் மட்டுமே ஏலத்தில் கலந்துக் கொள்ள அனுமதிக்கப்படுவர். மற்றவர்கள் யாரும் பண்ணைக்குள் / ஏலம் விடும் இடத்தில் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

7. கால்நடை ஏலம் எடுத்தவர் முழு ஏலத்தொகையினை செலுத்திய பின்னரே அடுத்த ஏலம் கோர அனுமதிக்கப்படுவார்.

8. ஏலம் முடிந்தவுடன் அதிக தொகைக்கு ஏலம் கோரிய நபரை தவிர இதர நபர்களுக்கு டேவணித் தொகை திருப்பி வழங்கப்படும்.

9. ஏலம் முடிந்தவுடன் முழுத்தொகையையும் உடனே செலுத்தி கால்நடைகளை அன்றே எடுத்துச் செல்ல வேண்டும்.

10. ஏலம் எடுத்தவர் ஏலத்தொகை முழுவதையும் செலுத்தி கால்நடைகளை எடுத்துச் செல்ல தவறும் பட்சத்தில் அவர் செலுத்திய முன்வைப்புத் தொகை முழுவதும் இழக்க நேரிடும். மேலும் வைப்புத் தொகையை அரசுக் கணக்கில் செலுத்துவதுடன் ஏலதாரர் பண்ணையில் பின்னர் நடைபெறும் அனைத்து ஏலத்திலும் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்.

11. ஏலத் தொகையுடன் அரசு அவ்வபொழுது நிர்ணயம் செய்யப்படும் இதர வரிகளும் சேர்த்து வசூலிக்கப்படும்.

12. ஏலம் விடப்படும் (கழிவு செய்யப்பட்ட) 17 கால்நடைகளை நடுவூர் ,மாவட்ட கால்நடைப்பண்ணையில் உள்ள கால்நடை பிரிவு மற்றும் பால்பிரிவு கால்நடை உதவி மருத்துவர்களை அணுகி அனுமதி பெற்று பார்வையிடலாம்.

13. ஏலம் விடப்பட்டு, உடனடியாக எடுத்துச் செல்லாத கால்நடைகள் இறந்தாலோ அல்லது வேறு வகையில் இழப்பு ஏற்பட்டாலோ கீழே கையொப்பம் அளித்துள்ள அலுவலரை எந்த வகையிலும் பாதிக்காது.

14. ஏலம் எடுக்காத ஏலதாரர் செலுத்திய ஏல முன்வைப்புத் தொகை ஏலம் முடிந்தவுடன் வங்கி வரைவோலையாக திரும்ப வழங்கப்படும்.

15. ஏலம் எடுத்த கால்நடைகளை எடுத்துச்செல்ல அவர்களது சொந்த செலவிலேயே வாகனம் போன்றவற்றை ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

16. குடிபோதையில் இருப்பவர்கள் ஏலத்தில் கண்டிப்பாக கலந்து கொள்ள முடியாது.

17. ஏலம் கேட்புத் தொகை அரசு நிர்ணயித்த தொகைக்கு குறைவாக இருப்பினும் அல்லது நிர்வாக காரணங்களாலும் ஏலம் தடைபட்டாலும் ஏலத்தை தள்ளி வைக்கவும், இரத்து செய்யவும் கீழே கையொப்பம் அளித்துள்ள அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.

18. மத்திய / மாநில அரசு ஊழியர்கள் மற்றும் அவர் குடும்பத்தினர் இந்த பொது ஏலத்தில் பங்கு பெற அனுமதி இல்லை.

19. கொரோனா வைரஸ் (COVID- 19) பரவல் முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைக்காக அனைத்து ஏலதாரர்களும் கட்டாயம் முகக் கவசம் (Face Mask) அணிந்து, சமூக இடைவெளியை பின்பற்றி கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

20. ஏலம் தொடர்பாக எழும் அனைத்து நிகழ்வுகளிலும் கீழே கையொப்பம் அளித்துள்ள அலுவலரின் தீர்ப்பே இறுதியானது என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்